# சங்க இலக்கியத்தில் இசையும் கூத்தும்

கு. இராமநாதன் உதவிப்பேராசிரியர் வரலாற்றுத்துறை என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி, கோவை, தமிழ்நாடு, இந்தியா.

**முன்னுரை**

சங்க கால மக்களின் வாழ்வில இசையும் கூத்தும் இரண்டறக் கலந்து வாழ்திருந்தன எனலாம். இதற்குச் சான்றாக தொல்காப்பியம் திகழ்கின்றது. இசையையும், கூத்தையும் துணையாகக் கொண்டு பாணர்கள் வாழ்க்கை நடத்தினர் என்ற கருத்தினை,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

(பொருளதிகாரம் நூற்பா -1037)

என்று தொல்காப்பியம் சுட்டுகின்றது. சங்க இலக்கியத்தில் இசைக்கருவிகள் பற்றிய கருத்துக்களும், இசையை வளர்த்த பாணர்கள பற்றிய செய்திகளும் இசைப் பண்கள் பற்றிய செய்திகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன. மேலும், இசையோடு இணைந்து வளர்த்த கூத்துக்கலை குறித்த கருத்துக்களும் காணப்படுகின்றன. அதனை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**சங்ககால இசைக்கருவிகள்**

சங்ககாலத்தில் ஏராளமான இசைக்கருவிகள் மக்களின் பயன்பாட டில் இருந்துள்ளன. தொல்காப்பியர் கருப்பொருளைப் பற்றி கூறும் போது யாழினையும், பறையினையும் குறிப்பிடுகின்றார். மேலும், யாழினைப் பற்றி தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில்,

"அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்

உளவென மொழிப இசையோடு சிவணிய

யாழின் மறைய என்மனார் புலவர்"

(தொல்.எழுத்து நூற்பா - 33)

என்று குறிப்பிடுகின்றார். யாழின் உறுப்புக்கள் குறித்துப் பெரும்பாணாற்றுப்படை விளக்குகிறது. பச்சை செறிதுணை, போர்வை, வறுவாய், கவைக்குடை, நரம்பு, கோடு என்பன யாழின் உறுப்புகளாகும். இசைக்கருவிகள் பற்றிய பட்டியலைக் கூத்தராற்றுப்படை விளக்குகின்றது.

"திண்வார் விசித்த முழவோடு ஆகுளி

நுண்ணுருக்கு உற்ற விளங்கடர்ப் பாண்டில்

மின்னிரும் பீலி அணித்தழைக் கோட்டொடு

கண்ணிடை வகுத்த களிற்றுயிர்த் தூம்பின்

இளிப்பயிர் இமிரும் குறும்பறந்தூம்பொடு

விளிப்பது கவரும் தீங்குழல் துதை

நடுவு நின்று இசைக்கும அரிக்குரல் தட்டை

கடிகவர்பு ஒலிக்கும வல்வாய் எல லரி

நொடிதரு பாயணிய பதலையும் பிறவும

கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப

நேர்சீர் சுருக்கிய காயக்கலப்பையிர்''

(மலைபடுகடாம் பா-3-13)

என்ற கூத்தராற்றுப்படை அடிகள் மூலம் சங்க கால மக்கள் பல்வேறு இசைக்கருவிகளைத் தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்தி வந்து உள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

குறிஞ்சி நிலத்தில் உள்ள மக்கள் தொண்டகப் பறையைப் பயன்படுத்தினர். கிளிகளை ஓட்டவும் கூத்தாடவும் இதனை முழக்கினா ் என்ற குறிப்பு நற்றிணை 104 – வது பாடலிலும ் அகம் 118 - வது பாடலிலும் காணப்படுகின்றது.

''கருங்குவேள் அருவி புறங்குமலைக் கவாஅன்

தேம்கமழ் இணர வேங்கை சூடி'' (அகம் பா.எ.118)

**சங்ககால இசைப்பண்கள்**

சங்ககால மக்களால் குறிஞ்சிப்பண், மருதப்பண், பாலைப்பண், காஞ்சிப்பண், செவ்வழிப்பண், பஞ்சுரப்பண், விளிரிப்பண் என்ற பல பண்கள் இசைக்கப்பட்டன. குறிஞ்சி நிலத்திற்குரிய பண் குறிஞ்சிப்பண். அதனை முருகனுக்கு வெறியாட்டு நிகழும்போது இசைத்தனர் என்ற செய்தியைத் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. இசையானது மக்களின் வாழ்வியலோடு இணைந்த ஒன்றாக இருந்ததால் மலைச்சாரலில் உள்ள தினைப் புனத்தில் குறப்பெண் ஒருத்தி குறிஞ்சிப்பண் பாடும் போது அதனைக் கேட்ட யானை தினையையும் உண்ணவில்லை. நின்ற இடத்தை விட ்டு நகரவும் இல்லை. ஒருவித மயக்கத்தில் உறங்கிய நிலையில நின்றது என்பதை,

''ஒலியியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி

பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக

குரலும் கொள்ளாது நிலையிலும் பெயராது

படாஅப் பைங ்கண் பாடுபெற்று ஒய்யென

மறம் புகழ் மழகளிறு உறங்கும ்'' (அகம் பா.எ.102)

என்று அகநானூற்றுப் பாடல் அகம் வழி அறியலாம்.

பாலைப்பண் மிக இனிமையான பண். அதனைக் கேட்கும் தீயவரும் கூட நல்லவராக மனமாற்றம் அடையவர். அத்தகைய சக்தி அப்பண்ணிற்கு உண்டு. இதனை,

''ஆறலை கள்வர் படைவிட அருளின

மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை'' (பொரு - பா.எ.21-22)

என்று பொருநராற்றுப்படை காட்டுவதன் வழி அறியலாம். கள ்வர்கள் பொருள் பறிக்கச் சென்ற பொழுது, வழிப்போர்கள ் பாடிய பாலைப் பண்ணைக் கேட்டு மனமாற்றம் அடைந்து தங்களின் கொடுந்தொழிலைக் கைவிட ்டனர் என்பது இதன் பொருளாகும்.

மருதப்பண்ணை விடியற்காலைப் பொழுதில் பாடினர். விறலியர் இப்பண்ணைச் ச ீறி யாழில ் இசைத்துப் பாடினர் என்ற கருத்தினை மலைபடுகடாம ் எடுத்தியம்புகின்றது.காஞ்சிப்பண் உடலில் ஏற்பட ்ட நோயின் வருத்தம் தீரச் சங்ககால மக்களால் பாடப்பட்டது என்ற கருத்தினைப் புறநானூற்றுப் பாடல ் கூறுகின்றது. செவ்வழிப்பண் முல்லைக்கும ், நெய்தலுக்கும் உரிய மாலை நேரப்பண் ஆகும். இப்பண்ணைக் கேட்டுத் தலைவனைப் பிரிந்து தனித்திருந்த தலைவி வருந்தினாள் என்ற செய்தியினை,
''பையுள ் நல்யாழ் செவ்வழி வகுப்ப

ஆருயிர் அணங்கும் தெள்ளிசை

மாரி மாலையும் தமியள் கேட்டே" (அகம் பா.எ.214)

என்று அகநானூற்றுப் பாடல் விளக்குகின்றது.

குறிஞ்சிநில மகளிர் வேங்கை மலர் பறிக்கும் போது பஞ்சுரப் பண்ணைப் பாடினர். அப்போது அதனைக் கேட்ட வழிப்போக்கர்கள் அஞ்சினர் என்ற நிகழ்வினை ஐங்குநுறூறு பாடல் கூறுகின்றது. சங்ககால மக்கள் வாழ்வின் இன்பநிலையிலும் துன்ப நிலையிலும் இசைப்பண்களைப் பாடி மன இன்பத்தையும் மன அமைதியையும் அடைந்தனர் என்பதை முடிகின்றது.

**சங்ககால பாணர்கள்**

சங்க காலத்தில் வாழ்ந்த இசைக் கலைஞர்கள் பாணர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் சீறியாழ் பேரியாழ் என்ற இசைக்கருவிகளை இசைத்தனர். பாணர்கள் ஊர் ஊராகச் சென்று தங்களது இசைத்திறமையைக் காட்டி மக்களையும் மண்ணையும் மகிழ்வித்தனர். இவர்களின் வாழ்க்கைநிலை பற்றிய கருத்துக்கள் பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. சங்க காலத்தில் வாழ்ந்த மன்னர்களையும், வள்ளல்களையும் போற்றிப் புகழ்ந்து தங்களின் கலைத்திறமையை வெளிப்படுத்திப் பரிசில் பெற்று வாழ்ந்து வந்தனர். வள்ளல்கள் பாணர்களுக்குப் பொற்றாமரையினையும் பாடினிகளுக்குப் பொன்னரி மாலைகளையும் கொடுத்தனர்.

**சங்க இலக்கியத்தில் கூத்துக்கலை**

சங்ககாலத் தமிழகத்தில் குரவைக்கூத்து, துணங்கைக் கூத்து, வெறியாட்டு போன்ற கூத்து வகைகள் காணப்பட்டன. மேலும், இக்காலத்தில் வள்ளிக்கூத்து என்ற ஆடல் ஆடப்பட்டது. தொல்காப்பியர் இதனை "வாடாவள்ளி" என்று குறிப்பிடுகின்றார் பெரும்பாணாற்றுப்படை வாடா வள்ளியின் சிறப்பினை,
"வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்
நாடுபல கழிந்த பின்றை" (பெரும் பா.எ.370-371)
என்று குறிப்பிடுகின்றது. விழாக்கள் நடைபெறும் காலங்களில் ஆடுமகள் இன்னியம் கறங்க கயிற்றின் மேல் நின்று ஆடி கூத்து நிகழ்த்திய செய்தியைக் குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடுகின்றது. இதனை,
"சாறுகொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி
அரிக்கூட்டு இன்னியம் கறங்க ஆடுமகள்
கயினூர் பாணியில் தளரும் சாரல்" (குறிஞ்சி பா.எ.192-194)
என்ற வரிகள் உணர்த்துகின்றன.

சங்க காலத்தில் கூத்துக்கலையை அரசர்களும் போற்றினர். பதிற்றுப்பத்தில் இடம் பெறும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற அரசன் ஆடற்கலையின் மீது பெருவிருப்பு கொண்டவனாகத் திகழ்ந்தான். இதனைப் பதிற்றுப்பத்தின் உரையாசிரியர்

"வெளியுறு நுடக்கம் போல தோன்றி ஆடும் மடமகளாம்

விறலியின் கூத்து நிகழ்ச்சிகளைக் கண்ணுற்ற வண்ணம்

நீடு உறைந்தான்"

என்று விளக்குகின்றார். அரசர்கள் மட்டுமின்றிப் புலவர்கள் பலரும் கூத்தோடு தொடர்புடையவர்கள் என்பதை அவர்களது பெயரால் அறிய முடிகின்றது. மதுரைக் கூத்தனார், மதுரைத் தமிழ்க் கூத்தன் சேந்தன் கூத்தனார் போன்றோர் கூத்தால் பெயர் பெற்ற புலவர்கள் ஆவர். விறலியர், வயிரியர், கோடியர், கண்ணுள் ஆரியர் என்று கூத்தரில் பல்வேறு பிரிவினர் இருந்தனர் என்று சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. சங்ககால மக்களின் அகவாழ்விலும், புறவாழ்விலும் கூத்துக கலைக்குப் பெரும்பங்கு இருந்துள்ளது. ஆதிமத்தியாரின் கணவன் சேரமன்னன் ஆட்டனத்தி ஆவான். அவன் சவரியாற்றில் நடன விளையாட்டில்

"மள்ளர் குழீஇய விழவினாலும்

மகளிர் தழீஇய துணங்கை யானும்

யாண்டும் காணேன் மாண்தக் கோனை'' (குறுந்தொகை பா.எ.31)
என்று குறுந்தொகை பாடல் விளங்குகின்றது.

போரில் ஈடுபடும் வீரருக்கு ஊக்கம் தரும் விதத்தில் வீர உணர்வுகளைப் பின்னணியாகக் கொண்டு கூத்துக்கள் நிகழ்த்தப்பட்டன. சினமாந்தர் வெற்றிக் குரவை பற்றிய செய்தியினை அகநானூறு

**முடிவுரை**

சங்ககால இலக்கியங்களில் இசைக்கலையும் கூத்துக்கலையும் குறித்த பல்வேறு பதிவுகள் காணப்படுகின்றன. இசைக்கலை, கூத்துக்கலை ஆகிய இரண்டு கலைகளுமே மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த ஒன்றாக அமைந்திருந்தன.

நிகழ்த்தப்படும் முறைகள், ஒப்பனை இசைக்கருவிகள் முதலியவற்றால் இடத்திற்கு இடம் மாறுபாடுகள் காணப்படும். ஆனால், அடிப்படையில் அவை நெருங்கிய தொடர்புடையவனாகக் காணப்படுகின்றன. பல கலைகள் தமிழகத்துக் கலைகள் என்பதைவிட தென்னிந்தியக் கலைகள் அல்லது திராவிடக் கலைகள் என்று சுட்டுவதற்கு ஏற்றவை. திராவிட மொழிகளிடையே காணப்படும் மொழி ஒற்றுமை திராவிட மக்களிடையே காணப்படும் பண்பாட்டு ஒற்றுமை போல நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளிலும் ஒற்றுமை காணப்படுகின்றது.

ஏற்கனவே, இருந்த கூத்துக்கள் கால வளர்ச்சிக்கு ஏற்ப தம்மை புதுப்பித்துக் கொண்டன. வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்களின் வருகையாலும் மக்கள் அதற்கு கொடுக்கும் ஆதரவாலும் பல கூத்துக்கள் அங்கே தம்மை இணைத்துக் கொண்டு செயல்படுகின்றன.

நிலத்திற்கேற்ற இசைப்பண்கள் காணப்பட்டன. கூத்துக்கலை மக்களின் அகவாழ்வோடும், புறவாழ்வோடும் தொடர்புடையதாய் அமைந்திருந்தன என்பதை அறிய முடிகிறது.

**பார்வை நூல்கள் :**

1. அகநானூறு (மூலமும் உரையும்) இரா.ஜெயபால்

2. தொல்காப்பியம் (பொருளதிகாரம்) (தொகுதி-1) தமிழண்ணல்

3. சங்க இலக்கியம் (பத்துப்பாட்டு) மூலமும் உரையும்.